# அரசறிவியல்

தரம் - 12, 13

## அரசியல் நிறுவனமாக அரசும் அரசாங்கமும்



Start Your Learning Journey with e-thaksalawa

The National e-learning Portal for The General Education

தேர்ச்சி :- 02 அரசறிவியல் பாடத்துறையில் உள்ளடங்கும் கருப்பொருட்களை அறிந்து அரசறிவியலை அறிந்து கொள்வதற்காக தன்னைத் தயார்படுத்திக்கொள்வார்

தேர்ச்சிமட்டம் :- 2.2 சமூகத்தில் அரசியல் வாழ்வில் அரசியல் நிறுவனங்கள் அவற்றின் பணிகளை விமர்சிப்பர்

## அரசியல் நிறுவனங்கள்

⇒ அரசியல் கற்கையில் அரசியலானது பலவாறு நிறுவனமயப்படுத்தப்பட்டி இருப்பதனாலும் பெரும்பாலான அரசியல் செயன்முறைகளும் நடைமுறைகளும் அந்நிறுவனங்களைச் சார்ந்து ஒழுங்கமைக்கப்பட்டிருப்பதனாலும் அரசியல் நிறுவனங்களில் ஆர்வம் காட்டப்படுகின்றது.

⇒ பொருளியல், சமூகவியல், கல்வியியல், சட்டம், அரசறிவியல் ஆகிய பல சமூக விஞ்ஞான துறைகளிலும் நிறுவனம் பற்றிய கற்கை முக்கியம் பெறுகின்றது.

### நிறுவனங்கள் பற்றிய கற்கையில் நிறுவனங்கள் ஒழுங்கமைந்திருப்பதற்கான பிரதான காரணிகள்

- சட்டதிட்டங்கள்
- ஒழுங்குவிதிகள்
- நடத்தை முறைமைகள்

### நிறுவனங்களின் வகைகள்

| முறைசார் நிறுவனங்கள் (Formal) | முறைசார் நிறுவனங்கள் (non formal) |
|---|---|
| 1. பாடசாலை | 1. குடும்பம் |
| 2. பல்கலைக்கழகம் | 2. உறவுமுறை |
| .3. நகரசபைகள் | 3. சாதி |
| 4. பாராளுமன்றம் | 4. வர்க்கம் |
| | 5. குலம் |
| | 6. பிதாவழிமுறை |
| | 7. தாய்வழிமுறை |


தொகுப்பு :- திருமதி ஜ.பிரமாலட்சுமி, ஆசிரியர் - (யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு.ப.இளங்கீரன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (வ/ புளியங்குளம் இந்துக் கல்லூரி)



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# அரசறிவியல்


## தரம் - 12, 13

### முறைசார் நிறுவனங்கள்

முறைசார் நிறுவனங்களான பாடசாலை , பல்கலைக்கழகம், நகரசபைகள், பாராளுமன்றம் போன்றவை அவற்றுக்கேயுரிய சட்டதிட்டங்களையும் ஒழுங்கு விதிகளையும் ஆளணியினரையும் கட்டிடங்களையும் கொண்டமைந்துள்ள கட்புலனாகும் முறைசார் நிறுவனங்களாகும்.

### முறைசாரா நிறுவனங்கள்

குடும்பம், உறவுமுறை, சாதி, குலம், வர்க்கம், பிதாவழிமுறை, தாய்வழிமுறை என்பவை பௌதீக ரீதியாக கட்புலனாகா விட்டாலும் அவற்றின் இருப்பையும் செயற்பாட்டையும் விளைவுகளையும் உணரலாம்.





தொகுப்பு :- திருமதி ஜ.பிரமாலட்சுமி, ஆசிரியர் - (யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு.ப.இளங்கீரன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (வ/ புளியங்குளம் இந்துக் கல்லூரி)



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## 2.4.1 அரசியல் நிறுவனங்கள் என்ற வகையில் அரசும் அரசாங்கமும்

சகல சமூகங்களிலுமுள்ள அடிப்படையானதும் மையமானவையுமான அரசியல் நிறுவனங்கள் அரசும் அரசாங்கமுமாகும்.

**அரசு மற்றும் அரசாங்கத்திலிருந்து தோன்றும் நிறுவனங்கள்**

1. பாராளுமன்றம்
2. கபினட்
3. நீதித்துறை
4. உள்ளூராட்சி மன்றங்கள்
5. ஆயதப் படைகள்
6. பொலிஸ்
7. சிறைச்சாலைகள்
8. பாடசாலைகள்
9. பல்கலைக்கழகங்கள்
10. இலாகாக்கள்

§ இந்த வகையில் அரசும் அரசாங்கமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவையாயினும் அவை இரண்டும் ஒன்றல்ல.

§ பழம் அரசியல் முறைமைகளில் அரசும் அரசாங்கமும் ஒன்றாகவே காணப்பட்டது. மன்னராட்சி முறையில் மன்னரே அரசாகவும் அரசாங்கமாகவும் இருந்தார்.

§ ஐரோப்பாவில் மானியமுறையும் முடியாட்சியும் வீழ்ச்சியுற்று உருவாகிய தாராள ஜனநாயக அரசின் ஒரு பிரதான பண்பு எனும் வகையில் அரசும் அரசாங்கமும் வேறுபடுத்தப்பட்டது.


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# அரசறிவியல்

## தரம் - 12, 13

### அரசுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான வேறுபாடு

| | அரசு | அரசாங்கம் |
|---|---|---|
| 1 | பழைமையான கருத்தாக உள்ளது. | ஒப்பீட்டு ரீதியாக கற்பதற்கு பரவலாக பயன்படுத்தப்பட்டது. |
| 2 | நீண்ட காலம் நிலைத்திருக்கும் சமூகத்தில் காணப்படும் அதிமுக்கிய அரசியல் நிறுவனம் ஆகும் | அரச செயற்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக மக்களால் குறுகிய காலத்திற்கு அமைக்கப்பட்ட நிறுவனம் |
| 3 | நவீன அரசு நிச்சயிக்கப்பட்ட ஆள்புலப் பிரதேசத்தில் ஒழுங்கமைந்தது. | அரசாங்கம் அரசின் மூலக்கூறுகளில் ஒன்று |
| 4 | அரசியல் ரீதியாக ஒழுங்கமைந்த பிரஜைகள் மீது ஆதிபத்தியம், அதிகாரம் வைத்திருக்கும் உரிமை கொண்டது. | அரசின் அதிகார பலத்தினை நிலை நிறுத்துவதற்கு உதவும் நிறுவனங்களில் ஒன்று |
| 5 | இறைமை அதிகாரத்தின் ஒரே உரித்தாளி | அரசின் கருவியாக அல்லது கரமாக செயற்படுவது |
| 6 | அரசியல் அமைப்பு எனும் அடிப்படைச் சட்டக் கட்டமைப்புக் கொண்டது | அரசின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் பிரதான முகவர் நிறுவனம் |
| 7 | சட்ட உருவாக்கம், கொள்கை உருவாக்கம், பொது மக்களுடன் தொடர்பு பேணல் ஏனைய அரசுகளுடன் தொடர்பு பேணல் எனும் அதிகாரங்களைக் கொண்டு நடத்த அரசாங்கத்தைப் பயன்படுத்தும். | சட்ட உருவாக்கம் - நடைமுறைப்படுத்துதல், கொள்கை உருவாக்கம் - நடைமுறைப்படுத்துதல் பொது மக்களுடன் தொடர்பு பேணல் ஏனைய அரசுகளுடன் தொடர்பு பேணும் அரசின் அதிகாரங்களை அரசுக்காக மேற்கொள்ளும் பிரதான நிறுவனமாகும் |

### அரசுபற்றிய பிரதான கருப்பொருள்கள்

அரசறிவியல் கற்கையில் பிரதானமானது ஒரே மையக்கருவானது பழம் கருப்பொருள்

1) அரசின் தோற்றம்
2) அரசின் இயல்பு
3) அரசின் நோக்கம்
4) அரசின் அதிகாரமும் இறைமையும்
5) அரசம், பிரஜையும் சமூகமும்
6) அரச அதிகாரத்தின் வரையறைகள்
7) அரசின் மாற்றங்களும் மாதிரிகளும்

ஆகிய கருப்பொருளில் அரசியல் தத்துவஞானிகளும் கோட்பாட்டாளர்களும் ஆய்வுகளை மேற்கொள்வர்

தொகுப்பு :- திருமதி ஜ.பிரமாலட்சுமி, ஆசிரியர் - (யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு.ப.இளங்கீரன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (வ/ புளியங்குளம் இந்துக் கல்லூரி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## அரசாங்கம் பற்றிய பிரதான கருப்பொருள்கள்

பழமை அரசியற் சிந்தனையில் இடம்பெறவில்லை. 18 ம் நூற்றாண்டின் பின் கலந்துரையாடப்பட்டது.

1) ஜனநாயக அரசாங்கங்கள்
2) ஜனநாயகமல்லாத அரசாங்கங்கள்
3) முன்னய ஜனநாயக அரசாங்கங்கள்
4) குடியரசு அரசாங்கங்கள்
5) ஒற்றையாட்சி அரசாங்கங்கள்
6) சமஷ்டி அரசாங்கங்கள்
7) கூட்டு அரசாங்கங்கள்
8) முதலாளித்துவ அரசாங்கங்கள்
9) சமவுடமை அரசாங்கங்கள்
10) பின்வந்த சமவுடமை அரசாங்கங்கள்

அரசாங்க முறைமைகள் பற்றிய பல்வேறு மாதிரிகளை ஒப்பீட்டு ரீதியாக கற்பதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றது.

## அரசும் அரசாங்கமும் ஒழுங்கமைந்த விதம்

**01 சட்டத்துறை நிறுவனங்கள்**

பாராளுமன்றம், சமஷ்டி சட்டமன்றம்
மாகாண சபைகள்

**02 நிறைவேற்று நிறுவனங்கள்**

ஜனாதிபதி, கபினட்,
அமைச்சுக்கள், இலாகாக்கள், அரச
கூட்டுத்தாபனங்கள் பணிக்குழு

**03 நீதித்துறை நிறுவனங்கள்**

உயர் நீதிமன்றிலிருந்து கீழ்
நோக்கிப் பரந்து செல்லும் நீதி
நிறுவனங்களின் முறைமை

**04 பாதுகாப்பு சட்டமும் ஒழுங்கும் தொடர்பான நிறுவனங்கள்**

ஆயதப்படைகள் பொலிஸ்
சிறைச்சாலைகள்


தொகுப்பு :- திருமதி ஜ.பிரமாலட்சுமி, ஆசிரியர் - (யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு.ப.இளங்கீரன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (வ/ புளியங்குளம் இந்துக் கல்லூரி)



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

### வினாக்கள்

1) அரசியல் நிறுவனங்களின் மையமான அரசையும் அரசாங்கத்தையும் ஆராய்க.

அல்லது

2) அரசியல் நிறுவனங்களில் பிரதானமாக அரசையும் அரசாங்கத்தையும் வேறுபடுத்தி ஆராய்க.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk


தொகுப்பு :- திருமதி ஜ.பிரமாலட்சுமி, ஆசிரியர் - (யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு.ப.இளங்கீரன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (வ/ புளியங்குளம் இந்துக் கல்லூரி)


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk